[1987 மார்ச் 23

கன்னியாகுமரி மாவட்டத்தில் குச்சிக்கிழங்கை பயன்படுத்தி சாராய ஆலை நிறுவுதல்.

137—(வினா எண் 10331)* **திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் குச்சிக்கிழங்கை பயன்படுத்தி ஒரு சாராய ஆலை நிறுவ அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் குச்சிக் கிழங்கைப் பயன்படுத்தி வடிசாலை அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, சாராய ஆலையைப் பற்றிய கேள்வி இது. இப்பொழுது குச்சிக் கிழங்கிலிருந்து பலவகையான பீர் கிடைக்கின்றது என்று சொல் கிறார்கள். ஆகவே, பீர் தயாரிக்கும் தொழிற்சாலையை உருவாக் குகின்ற செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த எண்ணமும் தற்போது இல்லை.

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, எங்களுடைய மாவட்டத்தில் குச்சிக்கிழங்கு அதிகமாகக் கிடைக்கிறது. எந்தவொரு தொழிற்சாலையும் கிடையாது. மேலும் படித்தவர்கள் அதிகமாக இருக்கின்ற மாவட்டமாக இருப் பதால், மாண்புமிகு அமைச்சரவர்கள் மூலமாக, அரசே தொழிற் சாலையை உருவாக்குவதற்குப் பரிசீலனை செய்யுமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடிசாராயம் உற்பத்தி செய்வதற் குப் பதில், லிக்குவிட் குளுகோஸ் தயாரிப்பதற்கு அங்கே ஆலைகள் அமைக்கலாம்.

1987 மார்ச் 23]

திரு. மா. மணிமாறன் : தலைவரவர்களே, புதிதாக ஏதாவது சாராயத் தொழிற்சாலை திறக்க அரசு ஆராய்ந்து வருகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, நிச்சயமாக ஆராயவில்லை.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் தர்மபுரி, சேலம் ஆகிய இரண்டு மாவட்டங்களில்தான் குச்சிக்கிழங்கு அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. அந்தக் குச்சிக்கிழங்கைப் பயன்படுத்தி தர்மபுரி மாவட்டத்தில் தனியார் துறையிலோ அல்லது அரசுத் துறையிலோ ஒரு எரிசாராயத் தொழிற்சாலை அல்லது குளுக்கோஸ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, 1—1—1987-க்குப் பிற்பாடு தமிழ்நாட்டில் சாராய விற்பனை இல்லை; தயாரிப்பும் இல்லை. ஆகவே தனியார் துறையாக இருந்தாலும் அரசுத் துறையாக இருந்தாலும் சாராவி தயாரிக் கும் உத்தேசம் இல்லை. மேலும் ஒரு லிட்டர் கருப்பஞ்சாற்று கசடிலிருந்து தயாரிக்கப்படும் சாராவிக்கும் குச்சிக்கிழங்கி லிருந்து தயாரிக்கும் சாராவிக்கும் அதிக விலை வித்தியாசம் இருக்கிறது. கருப்பஞ்சாற்று கசடு சாராவி ரூ. 3.61 முதல் ரூ. 4.32 வரை ஆகிறது. ஆனால் குச்சிக்கிழங்கு சாராவிக்கு ரூ. 8.23 ஆகிறது. அதனுடைய மூலப்பொருளுக்கு மட்டும்; சாராவி தயாரிக்கின்ற செலவு ரூ. 12.74 வருகிறது. ஆகவே குச்சிக்கிழங்கிலிருந்து சாராவி தயாரிப்பதாக இருந்தாலும் அதை யாரும் வாங்க முன்வரமாட்டார்கள். குளுக்கோஸ் தயாரிக்க வேண்டுமானால் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பரிந் துரை செய்து, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக அரசுக்கு வருமானால் மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் அதுபற்றி தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள்.